
Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:


ஐந்து மதிப்பெண் வினாக்கள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி


1. 1. சாதகமற்ற சூழலில் இனப்பெருக்கம் செய்வதற்காகத் சில உயிரிகளில் பல பிளவுமுறை நடைபெறுகிறது.
   2. உட்கரு தொடர்ந்து பிரிவடைந்து பல உட்கருக்களாக உருவாகின்றன.
   3. பல பிளவு முறையில் சமமான செல் பிரிதலினால் ஒரு உயிரியிலிருந்து நான்கு அல்லது பல சேய் உயிரிகள் தோன்றுகின்றன.
   4. மேலும் பிளவுறுதல் நிகழ்வு முழுமையடையும் வரை சேய் உயிரிகள் பிரிவதில்லை.
   5. இதற்கு பன்மடிப் பகுப்பு என்று பெயர்.
   6. பிளாஸ்மோடியத்தில் சைஷாண்ட் மற்றும் உசைட் நிலையில் பலபிளவு முறை நடைபெறுகிறது.
   7. சைஷான்ட் நிலையில் மீரோசைட்டுகள் உருவாகின்றன.
   8. உசைட் நிலையில் ஸ்போரோசோயிட்டுகள் உருவாகின்றன.
   9. அமீபாக்கள் சாதகமற்ற சூழலில் உறையாக்கம் மூலமும் இனப்பெருக்கம் செய்கிறது.



2. இரண்டு ஒற்றை மய இனச்செல்கள் இணைவதே ஒருங்கிணைவாகும்
   ஒருங்கிணைவு முறையின் பல்வேறு வகைகள்:
   i) தன் கருவுறுதல்:-
   ஒரு செல்லிலிருந்தோ அல்லது ஒரே உயிரியிலிருந்தோ உருவாகின்ற ஆண் மற்றும் பெண் இனச்செல்கள் இணைந்து கரு முட்டையை உருவாக்குகின்றன.
   2. எ.கா: ஆக்டினோஸ்பேரியம் மற்றும் பாரமீசியம்.
   ii) அயல் கருவுறுதல்:
   1.ஆண் மற்றும் பெண் என்னும் இரு தனித்தனி பெற்றோர்களிலிருந்து உருவாகின்ற ஆண் மற்றும் பெண் இனச்செல்கள் ஒன்றிணைந்து கருமுட்டை உருவாகிறது.
   2. **எ.கா:** மனிதன்.
   iii) முழு சேர்க்கை:
   1. கீழ் நிலை உயிரிகளில் சில சமயங்களில் முதிர்ந்த உயிரிகள் இனச்செல்களை உருவாக்காமல், அவ்வுயிரிகளே இனச்செல்கள் போன்று செயல்பட்டு ஒன்றிணைந்து புதிய உயிரிகளைத் தோற்றுவிக்கின்றன.
   2. **எ.கா:** டிரைக்கோநிம்பா.
   iv) இளம் சேர்க்கை:
   முதிர்ந்த பெற்றோர் செல்லிலிருந்து மறைமுகப்பிரிவு மூலம் உருவாகும் இரு இளம் சேய் செல்கள் இனச்செல்கள் போன்று செயல்பட்டு ஒன்றிணைந்து புதிய உயிரிகளைத் தோற்றுவிக்கின்றன.
   v) மாறுபட்ட செல் சேர்க்கை:
   அமைப்பில் மாறுபட்ட இரு சிறிய இனச்செல்கள் ஒன்றிணையும் முறை புதிய மாறுபட்ட செல் சேர்க்கை எனப்படும்.
   vi) ஒத்த செல் சேர்க்கை:
   1. அமைப்பிலும் செயலிலும் ஒரே மாதிரியான இரு இனச்செல்கள் ஒன்றிணைதல் ஒத்த செல் சேர்க்கை எனப்படும்.
   2. எ.கா: மோனோசிஸ்டிஸ்.
   vii) வேறுபட்ட செல் சேர்க்கை:
   முற்றிலும் வேறுபட்ட இரு இனச்செல்கள் ஒன்றிணையும் முறை வேறுபட்ட செல் சேர்க்கை எனப்படும்.
3. **இருசமப்பிளவு:**
   (i)பெற்றோர் உயிரி இரு சம பகுதிகளாகப் பிரிந்து ஒவ்வொரு பகுதியும் ஒரு சேய் உயிரியாக மாற்றமடைகிறது. முதலில் உட்கருவானது நேர்முக அல்லது மறைமுகப் பிரிவின் மூலம் பிரிவடைகிறது. (கேரியோகைனசிஸ்). தொடர்ச்சியாக சைட்டோபிளாசம் பிரிவடைகிறது (சைட்டோகைனசிஸ்).
   (ii) இவ்விதம் உருவாகும் சேய் உயிரிகள் மரபியல் ரீதியாக பெற்றோரை ஒத்திருக்கின்றன. பிளவு மட்டத்தைப் பொறுத்து இரு சமபிளவு முறையானது.
   அ) எளிய ஒழுங்கற்ற இரு சம பிளவுமுறை.
   ஆ) கிடைமட்ட இரு சமபிளவு முறை.
   இ) நீள்மட்ட இரு சமபிளவு முறை.
   ஈ) சாய்வுமட்ட இரு சமபிளவு முறை.
   அ. எளிய ஒழுங்கற்ற இரு சமபிளவுமுறை:
   (i) இவ்வகை பிளவுறுதல் அமீபா போன்ற ஒழுங்கற்ற வடிவமுடைய உயிரிகளில் நடைபெறுகின்றது.
   (ii) இம்முறையில் சுருங்கு நுண்குமிழ் செயலிழந்து மறைந்து விடும். உட்கருமணி மறைந்து உட்கருவானது மறைமுகப் பிரிவு முறையில் பிளவுபடும். பின்னர் செல்லின் நடுவில் சுருக்கம் ஏற்பட்டு சைட்டோபிளாசம் பிரிந்து இரு சேய் செல்கள் தோன்றுகின்றன.

ஆ. கிடைமட்ட இரு சமபிளவு:
இம்முறையில் பிளவுமட்டம் உயிரியின் கிடைமட்ட அச்சில் ஏற்படுகின்றது.
எ.கா: பாராமீசியம் மற்றும் பிளனேரியா. பாராமீசியத்தில் பெரிய உட்கரு நேர்முகப்பிரிவு முறையிலும் சிறிய உட்கரு மறைமுக பிரிவு முறையிலும் பிரிவடைகின்றன.
இ. நீள்மட்ட இரு சமபிளவு:
இம்முறையில் உட்கரு மற்றும் சைட்டோபிளாசம் உயிரியின் நீள் அச்சில் பிரிவடைகின்றது. நீளிழை உயிரிகளில் பிளவின் போது நீளிழையானது ஒரு சேய் செல்லில் தக்கவைக்கப்படுகிறது. புதிய அடிப்படைகள் மற்றொரு சேய் செல்லின் நீளிழையைத் தோற்றுவிக்கிறது.
எ.கா: வோர்டிசெல்லா மற்றும் யூக்ளினா.
ஈ. சாய்வுமட்ட இரு சமபிளவு:
இம்முறையில் பிளவுமட்டம் சாய்வாக அமைகின்றது. டைனோஃபிளாஜெல்லேட்டுகளில் இவ்வகைப் பிளவுறுதல் காணப்படுகிறது.
எ.கா: செராஷியம்.


பாரமீசியத்தில் நடைபெறும் கிடைமட்ட இருசமபிளவு முறை


யூக்ளினாவில் நடைபெறும் நீள்மட்ட இருசம பிளவு முறை

மூன்று மதிப்பெண் வினாக்கள் ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி கட்டாய வினா எண் 18

4. (i) பாலிலா இனப்பெருக்க முறையில் உருவாக்கப்படும் சேய்கள் பெற்றோர்களின் பண்புகளையே கொண்டிருக்கும்.
(ii) இதையே பிரதி எனவும் சொல்லலாம்.
(iii) பிரதி என்பது பெற்றோரின் சாயலை கொண்ட சேய்களாகும்.
5. **காரணம்:**
அ) இராணிதேனீ முட்டையிடும்போது சில முட்டைகள் கருவுறாமல் இடப்படுகின்றன அது ஆண் தேனீயாக உருவாகிறது.
ஆ) ஆண் தேனீக்கள் கருவுறாத முட்டையிலிருந்து உருவாகுவதால் விந்தின் 16 குரோமோசோம்களும். அண்டத்தின் 16 குரோமோசோம்களும் இணைந்து 32 குரோமோசோம்கள் காணப்படுகின்றன.
6. 1. பெற்றோர் உயிரி இருசம பகுதிகளாகப் பிரிந்து ஒவ்வொரு பகுதியும் ஒரு சேய் உயிரியாக மாற்றமடைகிறது.
2. உட்கருவானது நேர்முக அல்லது மறைமுகப்பிரிவின் மூலம் பிரிவடைகிறது.
3. பின்சைட்டோபிளாசம் பிரிவடைகிறது.
4. அந்த சேய் உயிரிகள் மரபியல் ரீதியாக பெற்றோரை ஒத்திருக்கின்றன.

இரண்டு மதிப்பெண் வினாக்கள் ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி

7. (i) அமீபா பிளவுறுத்தல் மூலம் இனப்பெருக்கம் செய்கிறது.
(ii) பிளவுறுதல் என்பது செல் பிரிதல்.
8. (i) கன்னி இனப்பெருக்கம் என்பது அந்நிகழ்வின் பெயர்
(ii) வான்கோழியில் கன்னி இனப்பெருக்கம் நடைபெறுகிறது.
9. (i) முட்டையானது கருவுறாமல் ஒரு உயிராக வளர்வது கன்னி இனப்பெருக்கம் எனப்படும்.
(ii) (எ.கா) ரோட்டிபர், தேனீக்கள், மற்றும் வான்கோழி.
10. (i) பாலிலா இனப்பெருக்கத்தை விட பாலினப் பெருக்கமே மேம்பட்டது.
(ii) பாலிலா இனப்பெருக்கத்தில் வேறுபாடுகள் இருக்காது.
(iii) பாலினப் பெருக்கத்தில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.
11. 1. இது ஒரு உயிரியல் நிகழ்வாகும்.
2. உயிரிகள் தங்கள் சேய்களை உருவாக்குகின்றன.
3. சேய் உயிரிகள் வளர்ந்து முதிர்ச்சியடைந்த பின் இனப்பெருக்க நிகழ்வை தொடர்கின்றன.
12. இனப்பெருக்க செயலில் இரு பெற்றோர் ஈடுபட்டு இரண்டுவகை இனச்செல்கள் இணைந்து நடைபெறும் இனப்பெருக்கம் பாலினப் பெருக்கமாகும்.

ஒரு மதிப்பெண் வினாக்கள் அனைத்து வினாக்களுக்கும் விடையளி

13. (a) அர்ரீனோடோக்கி
14. (c) இணைதல்
15. (c) பாலினப் பெருக்கம்
16. (a) 'கூ' மற்றும் 'கா' இரண்டும் சரியானால் 'கா' என்பது 'கூ' வின் சரியான விளக்கம் ஆகும்.
17. (a) 'கூ' மற்றும் 'கா' இரண்டும் சரியானால் 'கா' என்பது 'கூ' வின் சரியான விளக்கம் ஆகும்.